**வேளாண் பல்லுயிர் பெருக்க வளம் உள்ள பகுதிகளில் பசியும், ஊட்டச் சத்து குறைபாடும் நிறைந்து உள்ளன: எம். எஸ். சுவாமிநாதன்**

First Published : 11 May 2011 02:53:03 AM IST



சென்னை, மே 10: இந்தியாவில் வேளாண் பல்லுயிர் பெருக்க வளம் அதிகம் உள்ள பகுதிகளில் பசியும், ஊட்டச் சத்து குறைபாடும் நிறைந்து உள்ளன என வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் கூறினார்.

வேளாண் பல்லுயிர் பெருக்க வளம் உள்ள பகுதிகளில் வறுமை மற்றும் ஊட்டச் சத்து குறைபாடை குறைக்கும் திட்டம் என்ற புதிய திட்டத்தை எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் செவ்வாய்க்கிழமை அறிமுகம் செய்தது.

கனடாவில் உள்ள ஆல்பெர்டா பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டத்தை முதல் கட்டமாக தமிழகத்தில் நாமக்கல் மாவட்டம் கொல்லி மலைப் பகுதியிலும், கேரளத்தில் வயநாடு மாவட்டம் மெனாங்கடி ஊராட்சியிலும், ஒரிஸôவில் கோராபுட் மாவட்டம் குந்துரா வட்டத்திலும் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் அமல்படுத்த உள்ளது.

அந்தந்தப் பகுதிகளில் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாயிகளுக்கு உதவுவதற்கும், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் அதில் பயிற்சி, விற்பனை உத்திகள் மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வு ஆகியவை இந்தத் திட்டத்தின் மூலம் அந்தந்தப் பகுதி மக்களுக்கு வழங்கப்பட உள்ளது.

திட்டத்தைத் தொடங்கி வைத்த எம்.எஸ். சுவாமிநாதன் பேசியது:

பருவநிலை மாற்றம், தொடர் பெட்ரோல் விலை உயர்வு, ஜப்பான் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஏழை மக்களும், விவசாயத்தில் ஈடுபடுபவர்களும் கடுமையாக

பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களுடைய வருமானத்தில் 70 முதல் 80 சதவீதம் உணவுக்காக மட்டும் செலவிடும் நிலை உருவாகியுள்ளது.

வேளாண் பல்லுயிர் பெருக்க வளம் உள்ள பகுதியில் உள்ள மக்களிடையே பசியும், ஊட்டச் சத்து குறைபாடும் நிறைந்து காணப்படுகிறது.

எனவே, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டி நிலையில் நாம் உள்ளோம்.

உணவுப் பொருள் சந்தைகளுக்கு கடுமையான விதிகளை வகுப்பது, வர்த்தக மாற்றத்தில் வெளிப்படத்தன்மையை அதிகப்படுத்துவது, உள்நாட்டு உணவு விநியோகத்தை மேம்படுத்த முயற்சி எடுப்பது, உள்நாட்டு உணவுப் பொருள்களின் விலை உயர்வைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் விலைவாசி உயர்வை ஓரளவு கட்டுப்படுத்த முடியும்.

இதுபோல் ஊட்டச் சத்து குறைபாடு மற்றும் வறுமையைப் போக்க, பயிரிடும் முறைகள் குறித்த ஆராய்ச்சி, வேளாண் முறைகள் குறித்த ஆராய்ச்சி மற்றும் கிராமப்புற வேளாண் மற்றும் விவசாயம் அல்லாத வாழ்வாதார முறைகள் குறித்த ஆராய்ச்சிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

இதன் ஒரு பகுதியாகத்தான் -வேளாண் பல்லுயிர் பெருக்க வளம் உள்ள பகுதிகளில் வறுமை மற்றும் ஊட்டச் சத்து குறைபாடை குறைக்கும் திட்டம்- என்ற திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என்றார்.

மத்திய திட்டக் கமிஷன் உறுப்பினர் மிஹிர் ஷா : 11-வது ஐந்தாண்டு திட்டத்தில் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான திட்டங்களை நாம் வகுத்தபோதும், அதில் தோல்வியடைந்துள்ளோம். இதற்கு திட்டங்கள் முழுமையாக மக்களைச் சென்றடையாததே காரணம்.

திட்டங்கள் முழுமையாக மக்களைச் சென்றடைய, ஆராய்ச்சி மையங்கள், சுயஉதவிக் குழுக்கள், பஞ்சாயத்து அமைப்புகள் உள்ளிட்ட உள்ளூர் அமைப்புகள் மூலம் அமல்படுத்த வேண்டும்.

எனவே, எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையமும் தங்களுடை புதிய திட்டத்தை இதுபோன்ற உள்ளூர் அமைப்புகளின் உதவியுடன் அமல்படுத்த வேண்டும் என்றார்.

**நெல்லுக்குப் பதில் மாற்றுப் பயிர்: பஞ்சாபியருக்கு விஞ்ஞானி யோசனை**

First Published : 11 May 2011 12:45:17 AM IST

புது தில்லி, மே10: நெல்லுக்குப் பதிலாக,மக்காச் சோளம் போன்ற பயிர்களை பயிரிட்டால் மண் வளத்தைப் பாதுகாக்கலாம் என்று பிரபல வேளாண் விஞ்ஞானி எம் எஸ் சுவாமிநாதன் பஞ்சாப் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தில் அதிக பரப்பில் நெல் தொடர்ந்து பயிரிடப்படுவதால். மண் வளம் பாதிக்கப்படுகிறது. மேலும்,நிலம் ஈரத்தன்மையுடன் உள்ளது. நெல்லுக்கு அதிகளவில் தண்ணீர் தேவைப்படுவதால், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைகிறது. மண்ணின் வளம்

பாதிக்கப்படுவதுடன், உப்புத்தன்மையும் ஏற்படுகிறது. பஞ்சாப் மாநிலத்தின் தென்மேற்குப் பகுதியில், சுமார் 80,000 ஹெக்டேரில் இத்தகைய பாதிப்பு உள்ளதாக சுவாமிநாதன் கூறினார்.

இதைத் தவிர்க்க,குறிப்பிட்ட காலத்துக்கு நெல் சாகுபடியை வேறுபகுதிக்கு மாற்ற வேண்டும் என்று அவர் யோசனை தெரிவித்தார். ஏற்கெனவே நெல் சாகுபடி செய்யப்பட்ட இடங்களில், மாற்றுப் பயிராக, குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படும் சோளம், மக்காச் சோளம், கம்பு போன்றவற்றைப் பயிரிடலாம் என்றும் அவர் கூறினார். இதன் மூலம் விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்றார்.

**செயற்கையாக பழுக்க வைக்கப்படும் பிளம்ஸ் பழங்கள்**

First Published : 10 May 2011 09:42:27 AM IST

குன்னூர், மே 9: செயற்கையாக பழுக்க வைக்கப்படும் பிளம்ஸ் பழங்களால் உடல்நலம் பாதிக்கப்படுவதாக மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

குன்னூரில் உள்ள தினசரி சந்தை மற்றும் சிம்ஸ் பூங்கா அருகில் உள்ள கடைகளில் ஏல், ரூபி, ஷாரா, கேலியேட்டா, பாண்டன்ஸ் உள்ளிட்ட வகை பிளம்ஸ் பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

கொடைக்கானல், குன்னூர் அட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து பறிக்கப்பட்டு, விற்பனைக்குக் கொண்டு வரப்படும் இவை கிலோ ரூ.80 முதல் ரூ.120 வரை விற்கப்படுகின்றன.

இந்த நிலையில், கார்பைட் கற்கள் மூலம் பிளம்ஸ் பழங்களை சிலர் பழுக்க வைப்பதாகவும், அதை சாப்பிடுவோருக்கு வயிற்றுப் போக்கு, வாந்தி, மயக்கம் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுவதாகவும் புகார்கள் எழுந்துள்ளன.

எனவே, இதுபோல் செயற்கை முறையில் பிளம்ஸ் பழங்களை பழுக்கை வைக்கும் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதுடன், போதிய விழிப்பணர்வையும் ஏற்படுத்த வேண்டுமென மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நவீன தொழில்நுட்பம்

**இசப்கல் - சாகுபடி நுட்பங்கள்:** இசப்கல் மருத்துவப் பயிர்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் விதை, உமி மருந்துப்பொருளாக பயன்படுகின்றன. குஜராத், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய பகுதிகளில் இசப்கல் பணப்பயிராக பயிரிடப்படுகிறது. இசப்கல் உற்பத்தி ஏற்றுமதியில் இந்தியா முதன்மையானதாக உள்ளது.

**இசப்கல் செடியின் அமைப்பு:** இசப்கல் மெல்லிய தண்டுடையது. ஓராண்டு வளரக்கூடிய தாவர வகையைச் சேர்ந்தது. செடிகள் 30-40 செ.மீ. உயரம் வளரக்கூடியது. வயது 4-6 மாதங்கள். இலைகள் ஒன்றுவிட்டு ஒன்றாக அல்லது குவிந்து வெளிப்புறம் சற்று வளைந்து காணப்படும். பூக்கள் வெள்ளை நிறத்தில் சிறிய அளவில் நான்கு பாகங்களாகக் காணப்படும்.

**காலநிலை, மண்:** இசப்கல் வளர்ச்சிக்கு குளிர்ச்சியான, அதே சமயம் குறைவான காற்று, ஈரப்பதம் உள்ள இடங்கள் ஏற்றது. நவம்பர் பருவம் சாகுபடிக்கு ஏற்றது. டிசம்பர் இறுதிவரை சாகுபடி செய்யலாம். மணற்பாங்கான நிலங்கள் ஏற்றவை. கார அமிலத்தன்மை 7 முதல் 8க்குள் இருத்தல் வேண்டும்.

**ரகங்கள்:** குஜராத் இசப்கல் 1, 2, டிராம்பே செலக்ஷன் (1-10) இசி 124345 போன்ற ரகங்கள் வணிக ரீதியாக சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

**சாகுபடி நுட்பங்கள்:** ஒரு எக்டருக்கு 7 முதல் 8 கிலோ விதைகள் தேவைப்படும். அதிக விளைச்சலைப் பெறுவதற்கு விதைப்பதற்கு முன் 1 எக்டருக்கு 25 கிலோ தழைச்சத்தும், 25 கிலோ மணிச்சத்தும் அடியுரமாக இடவேண்டும். விதைத்த 30 நாட்களில் 25 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டும். 15 டன் தொழு உரத்தை நிலத்தில் இட்டு இரண்டு முறை நன்கு உழுது தண்ணீர் பாய்ச்ச ஏதுவாக மேட்டுப்பாத்திகளை அமைக்க வேண்டும்.

விதைத்தவுடனும் பிறகு ஒவ்வொரு வார இடைவெளியிலும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். விதைகளை பாத்திகளில் 15 செ.மீ. நேர் வரிசையில் அக்டோபர் கடைசி அல்லது நவம்பர் முதல் வாரத்தில் விதைக்க வேண்டும். விதைகளை மண்ணுடன் கலந்து சன்னமாக கோடுகளில் விதைத்து மணலால் மூடவேண்டும்.
பயிர் பாதுகாப்பு - வெள்ளைக் கூண்வண்டு தாக்கம் இருப்பின் 5 சதம் லிண்டேன் கலவையை

கடைசி உழவின்போது தெளிக்க வேண்டும்.

அடிச்சாம்பல்நோய் - தாக்குதலைக் கட்டுப்படுத்த கார்பன்டசிம் (பவிஸ்டின்) மருந்தை 0.1 சத அளவில் தெளிக்க வேண்டும்.

**சாம்பல் நோய்:** 12 சதம் நனையும் கந்தகத்தை 15 நாள் இடைவெளியில் 2-3 முறை தெளிக்க வேண்டும்.

**வாடல் நோய்:** கேப்டான் 5 கிராம்/கிலோ விதையுடன் விதைநேர்த்தி செய்யலாம்.

**அறுவடை:** விதைத்த 60 நாட்களில் பூக்கள் தோன்றும். பூக்கள் தோன்றிய 2 வாரத்திற்கு பின் விதைகளை அறுவடை செய்யலாம். அடி இலை மஞ்சள் நிறமாக மாறும்போது பயிரை அறுவடை செய்ய வேண்டும். நல்ல சூரிய ஒளியிலும் பகல் வேளையிலும் தட்டியெடுத்தால் உலர்ந்த பூக்காம்பிலிருந்து விதைகளை எளிதாக பிரித்தெடுக்க முடியும்.

காலை நேரத்தில் செடியை வேரோடு பிடுங்கி எடுக்க வேண்டும். அறுவடை செய்த பயிரை ஓரிரு நாட்களில் குவியலாக வைத்து பின் நன்கு தட்டியெடுத்து தூற்றி விதைகளைப் பிரித்தெடுக்க வேண்டும். எக்டருக்கு 800 முதல் 1000 கிலோ வரை விதைகள் விளைச்சலாகக் கிடைக்கும். இதில் 30 சதவீதம் உமி காணப்படும். குஜராத் இசப்கல் -1, 2 ரகங்கள் அதிக விளைச்சல் தரக்கூடியவை.

**மருத்துவ பயன்கள்:** இசப்கலின் விதை, உமி 60 வகையான பாரம்பரிய நவீன மருந்துகள் தயாரிப்பில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. விதைகள் இனிப்புத்தன்மை உடையதாகவும், குளிர்ச்சியைத் தரக்கூடியதாகவும் உள்ளன. புற்றுநோயைக் குணப்படுத்துவதிலும் ரத்தத்தில் கொழுப்பின் அளவை குறைக்கவும் பயன்படுகிறது. (தகவல்: கோ.சதீஷ், ஜே.சுரேஷ், வி.செந்தமிழ், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், த.வே.பல்கலைக்கழகம், கொடைக்கானல்-624 103)-**டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**வெட்டிவேர்**

பதிவு செய்த நாள் : மே 11,2011,00:00 IST



வெட்டிவேர் புல் இனத்தைச் சேர்ந்தது. இது பெரும்பாலும் மணற்பாங்கான இடங்களிலும், ஆற்றுப் படுகைகளிலும் சிறப்பாக வளரும். நாணல் மற்றும் தர்ப்பைப் புற்களைப் போல் வளரும். இது நான்கு முதல் ஐந்து அடி உயரம் வரை வளரும். வேர் கொத்துக்கொத்தாக இருக்கும். இதன் வேரை வெட்டி எடுத்த பின் புல்லையும் வேரையும் வெட்டி நடுவில் உள்ள துண்டை மீண்டும் புதிதாக நட்டு பயிரிடுவதால் வெட்டிவேர் என வழங்கப்படுகிறது.

இதன் வேர் கருப்பு நிறமாக மணத்துடன் இருக்கும். இதனை பெண்கள் மணத்திற்காக தலையிலும் அணிவதுண்டு. இது உடலின் வேர்வையும் சிறுநீரையும் பெருக்கி வெப்பத்தை அகற்றி உடலுக்கு உரமாக்கியாகவும் செயல்படுகிறது. இதை ஒரு வருடத்தில் வெட்டி எடுக்கலாம். வேர் குச்சிகள் மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. இதன் பூ ஊதா நிறத்தில் இருக்கும். இதன் வேர் இரண்டு முதல் நான்கு மீட்டர் ஆழம் வரை செல்லும். இது லெமன்கிரேஸ், பாம்ரோசா புல் போன்று வளரும். வெட்டி வேர் மண் அரிப்பைத் தடுக்கும். மாடுகள் இதன் புல்லைத் தின்னும்.

நம் முன்னோர்கள் வெட்டிவேர் ஊறப்போட்ட சில்லென்ற பானைத்தண்ணீர், வெக்கையை விரட்டி அடிக்க வெட்டிவேர் தட்டி என்று அதன் மகிமையை முழுவதுமாக உணர்ந்திருந்தார்கள். வெட்டிவேர் ஊறிய தண்ணீரைக் குடித்தால் சர்க்கரை நோய் கட்டுப்படும் என்றும் கூறுகிறார்கள். இக்கால விஞ்ஞானிகள் வெட்டிவேர் கொண்டு பாய், காலணி, தலைக்குத் தொப்பி போன்றவற்றை தயாரிக்கிறார்கள். வெளிநாட்டவர் பலரும் அதன் பயனை அடைகிறார்கள். இத்தகைய மருத்துவம் வாய்ந்த வெட்டிவேரை எப்படி பயிர்செய்வது என்று பார்ப்போம். இதற்கு எத்தகைய மண்ணாக இருந்தாலும் பாதகமில்லை.

ஒரு ஏக்கருக்கு குறைந்தபட்சம் இரண்டு டன் வேர் நிச்சயம். மணல்பாங்கான நிலமாக இருந்தால் வேர் நன்கு இறங்கி விவசாயிகளுக்கு நல்ல மகசூலைத் தரும். இரண்டு டன்னுக்கு மேலும் கிடைக்க வாய்ப்புகள் அதிகம்.
இன்றைய நிலவரப்படி ஒரு டன் ஐம்பதாயிரம் ரூபாய் வரை விலைபோகின்றது. மூலிகை எண்ணெய் தயாரிப்பவர்களும் வாசனை திரவியங்கள் தயாரிப்பவர்களும் உடனடியாக வாங்கிக்கொள்ள தயாராக உள்ளனர்.

செடியை வேர் அறுபடாமல் பிடுங்கி எடுத்து, மேலே உள்ள பச்சை செடியை நீக்கிவிட்டு, வேரை மட்டும் மண் போக அலசி, உலர்த்தி கொடுப்பது அவசியம். 12 மாதங்களில் இருந்து 14 மாதங்களுக்குள் அறுவடை செய்துகொள்ளலாம்.
ஒரு ஏக்கருக்கு 12,000 முதல் 15,000 வரை நாற்றுகள் தேவைப்படும். ஒரு நாற்று 60 பைசாவிற்கு வாங்கி பயிரிட வேண்டியதுதான்.

முதல்முறை மட்டும்தான் இந்த செலவு. அடுத்தமுறை நம் நிலத்தில் இருந்தே நாற்றுகள் எடுத்துக்கொள்ளலாம். மிகுதியாக உள்ளதை தேவையானவர்களுக்கு விற்றுவிடலாம். ரசாயன உரம் தேவையில்லை. பூச்சிமருந்து தேவையில்லை. வெட்டிவேர் செடியே பூச்சிகொல்லியாக செயல்படுகிறது. பெரிய காய்கறித்தோட்டம் வைத்திருப்பவர்கள் ஊடுபயிராகவோ வரப்புகளிலோ நெருக்கமாக நட்டுவிட்டால் அதுவே பூச்சிவிரட்டியாகவும் செயல்படும். வேரை விற்று வரும்படியும் பார்க்கலாம்.

அதிக தண்ணீரும் இதற்கு தேவையில்லை. வாரம் ஒரு முறை தண்ணீர் விட்டாலே போதுமானது. கரும்பு நடுவதுபோல் நடவேண்டும். பார்ப்பதற்கு உலர்ந்தாற்போல் இருந்தாலும் நாற்று நட்ட பதினைந்திலிருந்து இருபத்தி ஐந்து நாட்களுக்குள் பச்சை பிடித்துவிடும். மூன்று மாதங்கள் கழித்து கால் மாற்றிவிட வேண்டும். ஆறு மாதங்கள் கழித்துகளை எடுக்க வேண்டும். அவ்வளவுதான். அதற்குப்பிறகு 13ம் மாதத்தில் அறுவடைதான்.
தொடர்புக்கு: எம்.அகமதுகபீர், 268/77, பழைய ஹவுசிங் யூனிட், எல்லீஸ் நகர் (அஞ்சல்), தாராபுரம்-638 657.-**எம்.அகமது கபீர், வேளாண்மை ஆலோசகர், அக்ரி கிளினிக், 93607 48542.**

**மதிப்பூட்டிய பாதாம்பால் விற்பனை**

பதிவு செய்த நாள் : மே 11,2011,00:00 IST



பாலை எளிய முறையில் மதிப்புக்கூட்டும் முயற்சியால் மூன்று மாதம் கெடாமல் வைத்திருக்கலாம். இதிலிருந்து பாதாம் பால் தயாரிக்கலாம். பாதாம் பாலில் பத்து வகையான நறுமண பால் தயாரிக்கலாம்.

1. பாதாம் பால்,
2. பிஸ்தா மில்க்,
3. ரோஸ் மில்க்,
4. ஸ்ட்ராபெரி மில்க்,
5. ஏலக்காய் மில்க்,
6. வென்னிலா மில்க்,
7. பைன் ஆப்பிள் மில்க்,
8. ஜிகர்தண்டா மில்க்,
9. சாக்லேட் மில்க்,
10. காபி மில்க் தயாரித்து கடையில் விற்பனை செய்வதன் மூலம் குறைந்த முதலீட்டில் வீட்டிலிருந்தபடியே அதிக லாபம் சம்பாதிக்கலாம்.

பாலை கெடாமல் வைத்திருக்க எந்தவிதமான ரசாயன கெமிக்கல் மற்றும் லிக்விட் பிரிசர்வேட்டிவ் கிளாஸ்-2, மற்ற கெமிக்கல் எதுவும் கலக்காமல் பாலை எளிய முறையில் மதிப்பு கூட்டும்

முயற்சியால் பாலில் பாதாம்பால் தயாரித்து வீட்டிலிருந்தே கடைக்கு விற்பனை செய்தால் கூடுதல் லாபம் கிடைக்கும்.

ஒரு பாட்டில் பாதாம்பால் தயாரிக்க பாட்டில், பால், சர்க்கரை, எசன்ஸ், மூடி, லேபிள் அனைத்து மூலப்பொருட்களும் சேர்த்து ஒரு பாட்டிலுக்கு ரூ.5 அடக்கவிலை ஆகும். நாம் கடைக்கு ஒரு பாட்டில் ரூ.10 விற்பனை செய்ய வேண்டும். பாட்டிலின் மேல் லேபிளில் எம்.ஆர்.பி. ரூ.15 அச்சிட்டு கடைக்கு விற்பனை செய்ய வேண்டும். கடைக் காரர் ஒரு பாட்டில் ரூ.13 விற்பனை செய்து ரூ.3 லாபம் அடைவார். தினமும் 100 பாதாம்பால் பாட்டில் விற்பனை செய்தால், மாதம் ரூ.1000 லாபம் சம்பாதிக்கலாம்.

இதே முறையில் பாக்கெட் பாலிலிருந்து மற்றும் பசுமாடு, எருமை மாடு வைத்திருப்பவர்களும் பாதாம்பால் தயாரிக்கலாம். 1 லிட்டர் பாலில் வெண்ணெய் எடுக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தி 50கிராம் வெண்ணெய் எடுக்கலாம். அதே பாலில் பாதாம்பால் தயாரித்தால் கூடுதல் வருமானம் கிடைக்கும். 5 லிட்டர் பாலில் கால் கிலோ வெண்ணெய் நமக்கு கிடைக்கும். வெண்ணெயின் மதிப்பு ரூ.60. வெண்ணெய் எடுத்த பாலில் பாதாம்பால் தயாரித்தால் பாலின் விலை ஒரு லிட்டர் ரூ.10 அடக்க விலை ஆகும்.

இந்த வகையான பாதாம்பால் எளிய முறையில் இயந்திரத்தின் உதவி இல்லாமல் கையால் சோடா மூடி போடும் சிறிய இயந்திரத்தை பயன்படுத்தி குறைந்த முதலீட்டில் தயாரிக்கலாம். சோடா மூடி இயந்திரத்தின் விலை ரூ.2000. வீட்டில் உள்ளவர்கள் மூலம் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 1000 பாட்டில் தயாரிக்கலாம்.

மற்றொரு முறை முழுவதும் இயந்திரத்தை பயன்படுத்தி பாதாம்பால் தயாரிக்கலாம். இதில் இரண்டு வகைகள் உள்ளது.

1. வெர்டிகல் டைப் - இதன் மூலம் ஒரு நாளைக்கு 2000 பாதாம்பால் பாட்டில் தயாரிக்கலாம். வேலை ஆட்கள் 6 பேர் தேவைப்படும். இதன் விலை 2 லட்சம் முதலீடு செய்ய வேண்டும். 2. ஹரிஜான்டல் டைப் - இதன் இயந்திரத்தின் விலை 4 லட்சம். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 6 ஆயிரம் பாதாம் பாட்டில் தயாரிக்கலாம். வேலையாட்கள் 10 பேர் தேவைப்படும். இதன் இரண்டுக்கும் இடம் 1000 சதுர அடி தேவைப்படும். தொடர்புக்கு: பி.சந்திரமோகன், 94892 56025.-**கே.சத்தியபிரபா, உடுமலைப்பேட்டை.**

92,000 டன் சர்க்கரைஏற்றுமதிக்கு ஒப்புதல்

மே 11,2011,02:33



புதுடில்லி:நடப்பு சர்க்கரை பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, உள்நாட்டு தேவைக்கும் அதிகமாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இதை கருத்தில் கொண்டு மத்திய அரசு, பொது உரிம அடிப்படையில், இவ்வாண்டு, 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்துள்ளது. நடப்பாண்டு மார்ச் மாதம் 22ம் தேதி, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையிலான, முக்கிய அமைச்சர்கள் அடங்கிய குழு, பொது உரிம அடிப்படையில், 5 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதியளித்தது. ஏப்., 19ம் தேதியன்று, இதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டது.

இதனடிப்படையில், சென்ற வாரம் வரையிலுமாக சர்க்கரை ஆலைகள், 92 ஆயிரம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்துள்ளன. பொது உரிம அடிப்படையில் சர்க்கரை ஏற்றுமதி மேற்கொள்ளும் நிலையில், எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல், சர்க்கரை ஆலைகள் ஏற்றுமதி செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.நடப்பாண்டில், ஏற்றுமதிக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள 5 லட்சம் டன் சர்க்கரையில், அண்டை நாடுகளுக்கு, 51 ஆயிரத்து 500 டன் சர்க்கரை ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சர்க்கரையை, ஆலைகள் மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சராசரி உற்பத்தி அடிப்படையில், ஏற்றுமதி செய்து கொள்ள முடியும்.

**மானிய விலையில் இடுபொருள் :வேளாண் உதவி இயக்குநர் தகவல்**

பதிவு செய்த நாள் : மே 11,2011,01:58 IST

அரியலூர்: செந்துறை வேளாண் விரிவாக்க மையத்தில் மானிய விலையில் இடுபொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. வேளாண் உதவி இயக்குநர் ராஜேந்திரன் விடுத்த அறிக்கை: அரியலூர் மாவட்டம், செந்துறை வேளாண்மை விரிவாக்க மையத்தில், மானிய விலையில் இடுபொருட்கள் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின்கீழ், குறுவை பட்டத்துக்கு தேவையான ஆடுதுறை-36, ஆடுதுறை-43 (அதிசய பொன்னி) நெல் ரகங்கள் மானிய விலையில் தற்போது விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

எண்ணெய் வித்து உற்பத்தி திட்டத்தின்கீழ், கைத்தெளிப்பான்கள் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. (ஒரு கைத்தெளிப்பான் விலை ரூ.2,075 ஆகும். இதில் மானியம் ரூ.800 போக, மீதமுள்ள 1,275 ரூபாயை, தனது பங்கு தொகையாக விவசாயி செலுத்த வேண்டும். எனவே செந்துறை வட்டாரத்தில் உள்ள விவசாயிகள், இந்த இடுபொருட்கள் மற்றும் வேளாண் கருவிகளை, மானிய விலையில் வாங்கி பயனடையுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு தங்கள் கிராமத்துக்கு வரும் உதவி வேளாண்மை அலுவலரை சந்தித்து பயனடையுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

**கொள்முதல் விலை குறைவு பருத்தி விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : மே 10,2011,22:57 IST

முதுகுளத்தூர் : முதுகுளத்தூர் பகுதியில் நவதானிய கடைகளில் கொள்முதல் செய்யும் பருத்தியின் விலை குறைவாக இருப்பதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கோடை கால பயிரான பருத்தி விவசாயத்திற்கு குறைந்த அளவு தண்ணீர் தேவைப்படுவதால், பருத்தியை விவசாயம் செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அப்படி உற்பத்தி செய்த பருத்திக்கு முதுகுளத்தூரில் உரிய விலை கிடைப்பதில்லை. விருதுநகரில் பருத்தி கிலோ 80 லிருந்து 90 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், முதுகுளத்தூரில் கிலோ 30 லிருந்து 35 வரை மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,760-2,790

**மணிலா பயறு**

80கிலோ கொண்ட மூட்டை 3,780-3,820

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 8,650-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,475-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,917-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா,புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்,
1குவிண்டால்(வரிஉள்பட) 12,300-00
டின் (15கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட) 10,800,00
15கிலோடின் (வரிஉள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,155,00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,470,00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,105.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)570-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,மே.10-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 12,000 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,950 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,100 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,800 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,மே.10-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 7,592
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 9,842
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 12,858
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 11,473
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 12,373
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 13,779
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 20,809

## எண்ணை மார்க்கெட்

கோவை,மே.10-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,520 | 98.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1120 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1180 | 75 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1010 | (-) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1120 | 71.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1620 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,035 | 58.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,380 | 90.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,225 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 990 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,030 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,030 | - |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.207.00 | அதிகபட்சவிலை | ரூ.260.00 |
| சராசரி விலை | ரூ.162.77 | சராசரி விலை | ரூ.244.52 |
| குறைந்தபட்சவிலை | ரூ.153.00 | குறைந்தபட்சவிலை | ரூ.211.00 |

**பட்டு நூல் ரூ.1,894**

## கோவை உழவர் சந்தை

கோவை,மே.10-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் (கிலோவுக்கு) | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 76-80 | காலிப்பிளவர் | ரூ. | 18-28 |
| கத்தரிக்காய் | ரூ. | 12-13 | பொறியல் தட்டை | ரூ. | 12-14 |
| வெண்டைக்காய் | ரூ. | 16-20 | பச்சை மொச்சை | ரூ. | 30-00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 12-13 | தேங்காய் | ரூ. | 12-14 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 16-00 | பட்டாணி | ரூ. | 74-00 |
| புடலை | ரூ. | 8-9 | பூண்டு | ரூ. | 100-00 |
| பீர்க்கான்காய் | ரூ. | 26-28 | கறிவேப்பிலை | ரூ. | 14-16 |
| சுரைக்காய் | ரூ. | 10-12 | அகத்தி | ரூ. | 15-00 |
| பாகற்காய் | ரூ. | 18-20 | வாழைக்காய் | ரூ. | 16-00 |
| கொத்தவரை | ரூ. | 12-14 | குடைமிளகாய் | ரூ. | 36-00 |
| பூசணிக்காய் | ரூ. | 10-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 24-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 6-7 | டபுள்பீன்ஸ் | ரூ. | 28-30 |
| மேராக்காய் | ரூ. | 16-18 | கறிபீன்ஸ் | ரூ. | 28-00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 10-12 | புஸ்பீன்ஸ் | ரூ. | 36-00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 22-00 | காளான் | ரூ. | 80-140 |
| சின்னவெங்காயம் | ரூ. | 20-22 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| பெரியவெங்காயம் | ரூ. | 11-00 | மாங்காய் | ரூ. | 10-12 |
| இஞ்சி | ரூ. | 32-00 | திராட்சை | ரூ. | 32-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 26-28 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 16-18 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 22-24 | கொய்யா1கிலோ | ரூ. | 26-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 25-00 | மாதுளை1கிலோ | ரூ. | 120-160 |
| கருணைகிழங்கு | ரூ. | 26-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 13-14 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | வரமிளகாய் | ரூ. | 80-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | மாம்பழம் | ரூ. | 50-70 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | ஆப்பிள் | ரூ. | 115-120 |
| சிறுகிழங்கு | ரூ. | 30-00 | சாத்துக்குடி | ரூ. | 40-00 |
| முள்ளங்கி | ரூ. | 10-12 | நெல்லிக்காய் | ரூ. | 44-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 20-00 | ஆரஞ்சு | ரூ. | 66-00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 9-10 | வெள்ளரி | ரூ. | 12-16 |
| நூல்கோல் | ரூ. | 20-00 | புளி 1 கிலோ | ரூ. | 75-00 |
| கொத்தமல்லி | ரூ. | 32-36 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 36-00 |
| டர்னிப்ஸ் | ரூ. | 20-00 | அவரை | ரூ. | 28-30 |
| முட்டைகோஸ் | ரூ. | 8-10 | நிலக்கடலை | ரூ. | 35-00 |
| கலர்கோஸ் | ரூ. | 14-00 | மக்காச்சோளம் | ரூ. | 12-18 |
| புதினா | ரூ. | 16-00 | தர்பூசணி | ரூ. | 9-12 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.26400 |
| மிளகு (சேட்டன்) | ரூ.27000 |
| மிளகு (வயநாடன்) | ரூ.28000 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 10300 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 11000 |
| சுக்கு(புதியது) | ரூ.15000 |
| சுக்கு(பழையது) | ரூ.12250 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.10200 |
| கொப்பரை நாடன் | ரூ.6850 |
| கொப்பரை ராசு | ரூ.6700 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6950 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ.7950 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7250 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22500 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 22750 |
| ரப்பர் பால் | ரூ. 16500 |
| காப்பி | ரூ. 10200 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3100 |
| நேந்திரகாய் | ரூ. 1250 |
| இஞ்சி | ரூ. 1250 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,536,00 | 16,560,00 | 16560,00 |
| ஒரு கிராம் | 2,067,00 | 2,070,00 | 2070,00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 58,675,00 | 62,800,00 | 63,000,00 |
| ஒரு கிராம் | 62,80 | 62,80 | 63,00 |